செ.வெ.எண் : 25/ ஆகஸ்ட் நாள் : 10.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

# ஓய்வூதியர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

# மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (10.08.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஓய்வூதியர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஓய்வூதியர் குடும்பநலநிதி மற்றும் ஓய்வூதியர் மருத்துவ நிதியாக 16 பயனாளிகளுக்கு ரூ.4,59,057/- மதிப்பிலான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

மாவட்ட கருவூலத்தின் மூலம் ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில் மாதந்தோறும் ஓய்வூதியதார் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஓய்வூதியர்கள் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் வழங்கினார்கள். அம்மனுக்களை ஆய்வு செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காண வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, ஓய்வூதியர் குடும்பநலநிதி மற்றும் ஓய்வூதியர் மருத்துவ நிதியாக 16 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.4,59,057/- மதிப்பிலான காசோலைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, ஓய்வூதிய இணை இயக்குநர் திருமதி.எஸ்.மஞ்சுளா, துணை இயக்குநர் திரு.கே.மதிவாணன், மாவட்ட கருவூல அலுவலர் திரு.கபீபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) திரு.கோ.சேஷன் உள்பட அரசு அலுவலர்கள், ஓய்வூதியதாரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**